# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.902/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சூசை ராஜ் | த-பெ | அருளாந்து |
| ஊர்: | : | பழங்குளம் | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தச்சர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.05.2026**

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பழங்குளத்தில் வசித்து தச்சராக வேலை செய்து வருகிறேன். கடந்த 30.06.2018 அன்று இரவு 7.20-7.40 மணியளவில் காரைக்குடிக்கு அழகர்மலையான் என்ற தனியார் பேருந்தில் திருப்பத்தூரில் இருந்து வந்து கொண்டிருந்தோம். குன்றக்குடிக்கு அருகில் உள்ள சாலையில் இருந்த புளியமரத்தில் எங்கள் வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாக பேருந்தை இயக்கி அதில் மோதியதால் இடது புறமாக மேற்படி பேருந்தானது கவிழ்ந்துவிட்டது. அதில் பயணம் செய்த 24 நபர்களில் 7 நபர்கள் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். மேற்படி விபத்து சமயத்தில் எனக்கு வலது கண் புருவ கீழ் பகுதி மற்றும் மூக்கு ஆகிய பகுதிகளில் கண்ணாடி கிழித்து காயம் ஏற்பட்டது. பதற்றம் மற்றும் மழை பெய்த காரணத்தால் மேற்படி பேருந்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. மற்றவருக்கு எங்கு காயங்கள் ஏற்பட்டது என்ற விபரங்கள் தெரியாது. காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். நானும் 108 ஆம்புலன்ஸில் சென்றேன். போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி விபரங்களை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கின் புகார்தாரர் குறித்து தெரியுமா என்றால் யார் எழுதியது யார் கொடுத்தது என்பது குறித்து தெரியாது. என்னை எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்று சுமார் இரவு 7.40-7.50 மணியளவில் விசாரணை செய்தார்கள். போலீசாருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திற்கு குறிப்பான இடத்தின் குறியீடுகள் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தில் குறிப்பிட்டு எத்தனை நபருக்கு எங்கு எங்கு காயம் ஏற்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் குறிப்பிட்டு தெரியாது. 7

நபர்கள் யார் யார் இறந்தார்கள் எந்த ஊரை சார்ந்தவர்கள் போன்ற விபரங்கள் தெரியுமா என்றால் அரை மணி நேரத்திற்கு பின்பு கிரைன் வரவழைக்கப்பட்டு பேருந்தை தூக்கிய பின்பு தான் கீழே இருந்தவர்களை கண்டுபிடித்தனர். அப்போது தான் 7 நபர்கள் இறந்ததாக தெரியும். வழக்கின் புகார்தாரர் சம்பவ இடத்தில் இரண்டு நபர்கள் தான் இறந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். பேருந்தில் பயணம் செய்தவர்களிடம் பயண சீட்டுகளை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. சம்பவ சாலையானது இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அகலமான தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் குறிப்பிட்டு எந்த இருக்கையில் அமர்ந்து இருந்தேன் என்றால் ஓட்டுநர் இருக்கைக்கு பின்பு உள்ள ஐந்தாவது இருக்கையில் அமர்ந்திருந்தேன். சம்பவ நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது பேருந்தின் அனைத்து ஜன்னல்களும் மூடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பேருந்துக்கு எதிர்திசையில் திடீரென ஒரு கார் வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. திடீரென எதிர்திசையில் ஒரு கார் வருவதால் அதனை மோதாமல் தவிர்ப்பதற்காக வளைத்த போது தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல.

நான் சொன்ன பேருந்து நான் சொன்ன சமயத்தில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் ஸ்ரீ காளியம்மன் கோவில் ஒன்று உள்ளது மேற்படி கோவிலுக்கு முன்பா அல்லது பின்பா என்றால் அங்கிருந்தவர்கள் முன்பு என்றும் அடிக்கடி அங்கு விபத்து நடக்கும் என்றும் சொன்னார்கள் எனக்கு அது குறித்து தெரியாது. பேருந்து அதிவேகமாக செல்லவில்லை என்றாலும் மழை பெய்ததால் பேருந்து மெதுவாக தான் சென்றது என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. புதுக்கோட்டையில் இருந்து பேருந்து 7.20 மணிக்கு எடுத்து சம்பவ இடத்திற்கு 7.40-7.50 மணிக்குள் வந்துவிட்டார். நான் ஓட்டுநர் சீட்டிற்கு ஐந்தாவது இருக்கையில் அமர்ந்திருப்பதால் மேற்படி விபத்தின் காரணம் சரியாக பார்க்கமுடியாது என்றால் சரிதான். நான் சொன்ன இடத்தில் இருந்து பேருந்து கிளம்ப வில்லை என்றாலும் விபத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 17:09:26 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.902/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஞானஜோதி | க-பெ | சாந்தக்குமார் |
| ஊர்: | : | ஆர்எஸ்மங்கலம் | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2026

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆர்எஸ்மங்கலத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. 2018 ம் வருடம் எனது கணவர் சாந்தக்குமார் ஒரு வார காலமாக வேலைக்கு சென்றுவிட்டார். வேலையை முடித்துவிட்டு 30.06.2018 அன்று பொன்அமராவதியில் இருந்து காரைக்குடிக்கு அழகர்மலையான் என்ற தனியார் பேருந்தில் வந்து கொண்டிருந்தார். எனது நாத்தனார் கணவர் ஆரோக்கிய சாமி என்பவர் மேற்படி எனது கணவர் பயணம் செய்த பேருந்து குன்றக்குடி கோட்டை காளியம்மன் கோவில் உள்ள புளியமரத்தில் மேற்படி பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாக சென்று மேற்படி மரத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு இரவு 8.00 மணியளவில் தகவல் சொன்னார். மேலும் அவரை காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக சொன்னதன் அடிப்படையில் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவர் நிகழ்விடத்திலேயே இறந்துவிட்டதாக தெரியவந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்கள் விசாரணையில் மேற்படி விபரங்களை நான் சொன்னேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த மைக்கேல் என்பவரின் மகன் அந்தோணி என்று தெரிய வந்தது.

குறுக்கு விசாரணை

போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் நான் காவல் நிலையத்திற்கு இரண்டு நாட்கள் கழித்து வந்தேன் தேதி எனக்கு தெரியாது அப்போது விசாரணை செய்தார்கள். எனக்கு யார் போன் செய்து தகவல் சொன்னார்கள் என்றால் 8 வருடம் ஆகிவிட்டதால் சரியாக நினைவில் இல்லை. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன பேருந்தில் எவ்வித விபத்தும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 17:09:31 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.902/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நிர்மலா | க-பெ | ஆரோக்கிய சாமி |
| ஊர்: | : | பனங்குளம் | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.05.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பனங்குளத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா2 எனது அண்ணன் மனைவி. தேதி மாதம் நினைவில் இல்லை. 2018 ம் வருடம் எனது அண்ணன் சாந்தக்குமார் ஒரு வார காலமாக வேலைக்கு சென்றுவிட்டார். வேலையை முடித்துவிட்டு தனியார் பேருந்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது சூசை ராஜ் என்பவர் எனது கணவர் ஆரோக்கிய சாமி என்பவரிடம் மேற்படி எனது அண்ணன் பயணம் செய்த பேருந்து காரைக்குடி சாலையில் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாகவும் அதனால் காயம்பட்ட அவர் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாக கேள்விபட்டேன். மேலும் அவர் நிகழ்விடத்திலேயே இறந்துவிட்டதாக நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் யார் என்ற விபரம் எனது கணவர் மூலமாக நான் பின்னர் தெரிந்து கொண்டேன்.

குறுக்கு விசாரணை

பேருந்தை ஓட்டிய நபரின் பெயர், ஊர் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 17:09:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.902/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆரோக்கிய சாமி | த-பெ | வேதநாயகம் |
| ஊர்: | : | தொண்டி | | |
| வயது: | : | 51/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் தொண்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இறந்த சாந்தக்குமார் எனது மைத்துனர். 30 ந்தேதி மாதம் நினைவில் இல்லை. 2016 ம் வருடம் ஒரு நாள் எனது மைத்துனர் சாந்தக்குமார் வேலையை முடித்துவிட்டு அழகர் மலையான் என்ற தனியார் பேருந்தில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். அப்போது சூசை ராஜ் என்பவர் எனது மைத்துனர் சாந்தக்குமார் மேற்படி பேருந்து திருப்பத்தூர் - காரைக்குடி சாலையில் சென்று கொண்டிருந்தபோது சாலையின் ஓரத்தில் இருந்த புளிய மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதனால் காயம்பட்ட அவர் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான் அங்கு சென்று பார்த்தபோது அவருக்கு வலது கால் கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. முகம் முழுவதும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னர்கள். பதற்றம் மற்றும் உறவினர்கள் அழுது கொண்டிருந்ததாலும் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை

பேருந்தை ஓட்டிய நபரின் பெயர், ஊர் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 17:09:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.